கோனூர் சென்றாய பெருமாள் கோயிலில் உறியடி திருவிழா

மேட்டூர், ஆக. 27: மேட்டூர் அருகே கோனூரில் உள்ள சென்றாய பெருமாள் கோயிலில் கிருஷ்ண ஜெயந்தியையொட்டி உறியடி திருவிழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக் கோயிலில் கடந்த வெள்ளிக்கிழமை சேர்வை பந்தல் அமைக்கப்பட்டு திருவிழா தொடங்கியது. திங்கள்கிழமை கோயிலில் இருந்து ஸ்ரீ கிருஷ்ணர், சென்றாய பெருமாள் சுவாமி சிலைகள் பக்தர்களால் தேரில் ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டது. கோயிலில் இருந்து தொடங்கிய ஊர்வலமானது மடத்துப்பட்டி, கூலையூர், சந்தை தானப்பட்டி வழியாக சென்று ஆண்டிக்கரையை சென்றடைந்தது. ஆண்டிக்கரையில் உள்ள தெப்பகுளத்தில் சுவாமி தேர் இறங்கியது. பக்தர்களுக்கு சுவாமி காட்சியளித்தார். அப்போது குளத்தை சுற்றி நின்றிருந்த பக்தர்கள் கோவிந்தா கோவிந்தா என பக்தி முழக்கம் எழுப்பினர். அதனைத் தொடர்ந்து அப்பகுதியில் உறியடி நிகழ்ச்சியில் நடைபெற்றது. பின்னர் ஆண்டிக்கரையிலிருந்து புறப்பட்ட தேர் மீண்டும் கோனூரில் உள்ள சென்றாய பெருமாள் கோயிலை வந்தடைந்தது.

இந்த விழாவில் மேட்டூர் எம்எல்ஏ சதாசிவம், கோயில் செயல் அலுவலர் சுதா, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ரேவதி ராஜசேகரன், நங்கவள்ளி ஒன்றிய திமுக செயலாளர் அர்த்தனாரி ஈஸ்வரர், ஐந்து கிராமங்களைச் சேர்ந்த ஊர் கவுண்டர்கள், 27 கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

பஞ்சப்படி உயர்வை வழங்கக் கோரி ஓய்வு பெற்ற போக்குவரத்து தொழிலாளர்கள் மறியல்

சேலம், ஆக. 27: பஞ்சப்படி உயர்வை முறையாக வழங்கக் கோரி ஓய்வு பெற்ற போக்குவரத்து தொழிலாளர்கள் செவ்வாய்க்கிழமை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் சேலம், தருமபுரி மண்டல கிளையின் சார்பில் அரசு போக்குவரத்துக் கழக தலைமை பணிமனை முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது. அந்த அமைப்பின் மண்டல பொதுச் செயலாளர் அன்பழகன் முன்னிலையில் நடைபெற்ற இந்த போராட்டத்துக்கு மண்டல தலைவர் பி.என்.பழனிவேலு தலைமை வகித்தார்.

இந்தப் போராட்டத்தில், பஞ்சப்படி உயர்வை முறையாக வழங்க வேண்டும், பணிக்காலத்தில் உயிரிழந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு வேலை வழங்க வேண்டும், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு திட்டம் உள்ளது போன்று, போக்குவரத்து ஓய்வூதியர்களுக்கும் மருத்துவ காப்பீடு வழங்க வேண்டும், அரசு போக்குவரத்துக் கழக வழித்தடங்களில் தனியார் பேருந்துகளை அனுமதிக்க கூடாது, இட ஒதுக்கீடு, சமூக நீதி அரசு வேலை என்ற கனவை சிதைக்கும் விதமாக ஒட்டுநர் நடத்துநர் மெக்கானிக் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்ய விடப்பட்டுள்ள டெண்டரை கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இந்த மறியல் போராட்டத்தில் அமைப்பின் மண்டல பொருளாளர் அழகேசன், நிர்வாகிகள் கந்தசாமி, ராஜேந்திரன், குப்புசாமி, மணிமுடி உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

சேலம் ராமகிருஷ்ணா சாலையில் உள்ள அரசு போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகம் முன்பு செவ்வாய்க்கிழமை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஓய்வு பெற்றோர் நல அமைப்பினர்.

சங்ககிரி மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் பொறுப்பேற்பு

சங்ககிரி, ஆக. 27: ஊத்தங்கரை அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளராகப் பணியாற்றி வந்த வி.கார்த்திகேயனி, சங்ககிரி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளராக செவ்வாய்க்கிழமை பொறுப்பேற்றார் (படம்).

இவர் மாவட்ட காவல் உயரதிகாரிகளைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

Canara Bank — Syndicate

தலைமை அலுவலகம் : பெங்களூரு

தேவனாங்குறிச்சி கிளை,
#5/544F, KSP காம்ப்ளக்ஸ், 1 தளம், அனங்கூர் மெயின் ரோடு,
தேவனாங்குறிச்சி, திருச்செங்கோடு-637209. Cell : 9489045717

ANNEXURE - 10

கையகப்படுத்தியதற்கான அறிவிப்பு [Section 13(4)]

(அசையாச் சொத்து குறித்து)

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002–ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் கீழே கையொப்பம் செய்துள்ள **கனரா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் அவர்கள் மேற்படி சட்டம் பிரிவு 13(12), விதி 3ன் படி, **29-05-2024** தேதியிட்ட கேட்பு அறிவிப்பில் குறிப்பிட்ட கடன்தொகையான **ரூ.20,88,133.41 (ரூபாய் இருபது இலட்சத்து எண்பத்து எட்டாயிரத்து நூற்று முப்பத்து மூன்று மற்றும் நாற்பத்தொரு மட்டும்)** அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்த வேண்டுமென்று கடன்பெற்றவரான **1. M/s. ஸ்ரீ குறிஞ்சி வேலா டெக்ஸ் (கடன்தாரர்),** C/o. திலகவதி, நெ.7/17 A, காமராஜர் தெரு, தேவனாங்குறிச்சி அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம், பின்கோடு - 637209. **2. திருமதி. M.திலகவதி (உரிமையாளர்),** க/பெ முருகேசன், 6/35, மெயின் ரோடு, தேவனாங்குறிச்சி அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம், பின்கோடு - 637209. **3. திரு. S.முருகேசன் (ஜாமீன்தாரர்),** த/பெ. சண்முக கந்தரம், 6/35, குறிஞ்சி வேலா இல்லம், அனங்கூர் மெயின் ரோடு, தேவனாங்குறிச்சி அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம், பின்கோடு - 637209 ஆகியோருக்கு அனுப்பப்பட்டது.

கடன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால், குறிப்பாக கடன்தாரருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதி முறைகளின் படியும் 8 & 9 வது விதியின்படியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **22-08-2024** அன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் வசம் உடைமையாக்கியுள்ளார்.

இது முதற்கொண்டு கடன்தாரர் அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அப்படி ஏற்படுத்தினால் அது **கனரா வங்கி, தேவனாங்குறிச்சி கிளைக்கு** சேரவேண்டிய கடன்தொகையான **ரூ.20,25,737.41 (ரூபாய் இருபது இலட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து எழுநூற்று முப்பத்து ஏழு மற்றும் நாற்பத்தொரு பைசா மட்டும்)** மற்றும் பின்னிட்ட வட்டி சேர்த்து இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டுவரப்படுவது யாதெனில் கடனீட்டுச் சொத்துக்களை மீட்பதற்கான கால அவகாசம் சர்பாஸி சட்டம் பிரிவு 13(8)க்கு உட்பட்டதாகும் என தெரிவித்துக்கொள்கிறோம்.

அசையாச் சொத்து விபரம் :

அயிட்டம் எண்.1 : இச்சொத்தானது நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், திருச்செங்கோடு துணை பதிவு மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, தேவனாங்குறிச்சி கிராமம், காமராஜர் தெரு, வார்டு நெ.7, நத்தம் ச.எண்.91 (புதிய ச.எண்.320/20), கதவு எண்.7/17-ல் அமைந்துள்ளது. இதன் மொத்தப்பரப்பளவு 688 ச.அடி. காலி மனையின் அளவுகள் : கிழமேல் இருபுறமும் 16 அடி, தென்வடல் இருபுறமும் 43 அடி. இதற்குண்டான **எல்லைகள் :** அயிட்டம் 2 மற்றும் நாராயணமுதலியாருக்கு சொந்தமான நடை ரோட்டிற்கு **கிழக்கு,** சின்னசாமி முதலியார் & மற்றவர்களுக்கு சொந்தமான காலி நிலத்திற்கு **மேற்கு,** நாராயண முதலியாருக்கு சொந்தமான நடை ரோட்டிற்கு **வடக்கு,** அயிட்டம் 1 & 2 மற்றும் 10½ அடி அகலத்தில் பரமசிவத்திற்கு சொந்தமான பொதுவான பாதைக்கு **தெற்கு.**

அயிட்டம் எண்.2A : இச்சொத்தானது நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், திருச்செங்கோடு துணை பதிவு மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, தேவனாங்குறிச்சி கிராமம், காமராஜர் தெரு, வார்டு நெ.7, நத்தம் ச.எண்.91 (புதிய ச.எண்.320/20), கதவு எண்.7/16-ல் அமைந்துள்ளது. இதன் மொத்தப்பரப்பளவு 1056 ச.அடி. காலி மனையின் அளவுகள் : கிழமேல் இருபுறமும் 24 அடி, தென்வடல் இருபுறமும் 44 அடி. இச்சொத்து **திரு. S.முருகேசன்** பெயரில் உள்ளது. இதற்குண்டான **எல்லைகள் :** நாராயண முதலியாருக்கு சொந்தமான பொதுவான நிலம் மற்றும் அயிட்டம் 2-க்கு **கிழக்கு,** அயிட்டம் 1, பரமசிவத்தின் வீடு மற்றும் அயிட்டம் 1 & 2-க்கு சொந்தமான 10½ அடி அகல வழிப்பாதைக்கு **மேற்கு,** நாராயண முதலியாரின் நடை ரோட்டிற்கு **வடக்கு,** அயிட்டம் 2B-க்கு **தெற்கு.**

அயிட்டம் எண்.2B : இச்சொத்தானது நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், திருச்செங்கோடு துணை பதிவு மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, தேவனாங்குறிச்சி கிராமம், காமராஜர் தெரு, வார்டு நெ.7, நத்தம் ச.எண்.91 (புதிய ச.எண்.320/20)-ல் அமைந்துள்ளது. இதன் மொத்தப்பரப்பளவு 459 ச.அடி. காலி மனையின் அளவுகள் : கிழமேல் இருபுறமும் 27 அடி, தென்வடல் இருபுறமும் 17 அடி. இச்சொத்து **திரு. S.முருகேசன்** பெயரில் உள்ளது. இதற்குண்டான **எல்லைகள் :** அயிட்டம் 3A-க்கு **கிழக்கு,** பரமசிவத்தின் வீட்டிற்கு **மேற்கு,** அயிட்டம் 2A-க்கு **வடக்கு,** ராஜாத்தினம்மாளின் வீட்டிற்கு **தெற்கு.**

அயிட்டம் எண்.3A : இச்சொத்தானது நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், திருச்செங்கோடு துணை பதிவு மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, தேவனாங்குறிச்சி கிராமம், காமராஜர் தெரு, வார்டு நெ.7, நத்தம் ச.எண்.91 (புதிய ச.எண்.320/20) கதவு எண்.7/16A-ல் அமைந்துள்ளது. இதன் மொத்தப்பரப்பளவு 51 ச.அடி. காலி மனையின் அளவுகள் : கிழமேல் இருபுறமும் 3 அடி, தென்வடல் இருபுறமும் 17 அடி. இச்சொத்து **திரு. S.முருகேசன்** பெயரில் உள்ளது. இதற்குண்டான **எல்லைகள் :** அயிட்டம் 3B-க்கு **கிழக்கு,** அயிட்டம் 2B-க்கு **மேற்கு,** அயிட்டம் 2A மற்றும் நாராயண முதலியாருக்கு சொந்தமான பொதுவான மரபாத்து நிலத்திற்கு **வடக்கு,** ராஜாத்தினம்மாளின் சொத்திற்கு **தெற்கு.**

அயிட்டம் எண்.3B : இச்சொத்தானது நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், திருச்செங்கோடு துணை பதிவு மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, தேவனாங்குறிச்சி கிராமம், காமராஜர் தெரு, வார்டு நெ.7, நத்தம் ச.எண்.91 (புதிய ச.எண்.320/20)-ல் அமைந்துள்ளது. இதன் மொத்தப்பரப்பளவு 1092 ச.அடி. காலி மனையின் அளவுகள் : கிழமேல் இருபுறமும் 78 அடி, தென்வடல் இருபுறமும் 14 அடி. இச்சொத்து **திரு. S.முருகேசன்** பெயரில் உள்ளது. இதற்குண்டான **எல்லைகள் :** தேவனாங்குறிச்சியிலிருந்து செல்லும் தென்வடல் பஞ்சாயத்து ரோட்டிற்கு **கிழக்கு,** அயிட்டம் 3A-க்கு **மேற்கு,** நாராயண முதலியார், ஆறுமுக முதலியார் & மற்றவர்களின் வீட்டிற்கு **வடக்கு,** R.மாணிக்கத்தின் வீட்டிற்கு **தெற்கு.**

நிலத்தின் மொத்தப் பரப்பளவு 3346 ச.அடி அதன்மீது கட்டப்படும் அல்லது எதிர்காலத்தில் கட்டப்படும் கட்டிடத்துடன் அனைத்து வழிப்பாதை & அனைத்து உரிமைகளும் சகிதம். அனைத்து சொத்துக்களும் **திரு. S.முருகேசன்** பெயரில் உள்ளது.

தேதி : 22-08-2024
இடம் : திருச்செங்கோடு

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கனரா வங்கி

சேலம் ரயில்வே கோட்டத்தில் ஒருங்கிணைந்த ஒய்வூதிய திட்டத்தில் 7,218 பேர் பயன்

கோட்ட மேலாளர் தகவல்

சேலம், ஆக. 27: சேலம் ரயில்வே கோட்டத்தில் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தில் 7,218 பணியாளர்கள் பயன் பெறுவர் என கோட்ட மேலாளர் பங்கஜ்குமார் சின்ஹா கூறினார்.

ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் குறித்து சேலத்தில் செய்தியாளர்களிடம் ரயில்வே கோட்ட மேலாளர் பங்கஜ் குமார் சின்ஹா கூறியதாவது:

சேலம் கோட்டத்தில் மொத்தம் 8,763 பேர் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் 7,218 பேர் பயன்பெறுவார்கள். இந்தத் திட்டத்தின் சிறப்பம்சமாக ஓய்வூதியர்களுக்கு 50 சதவீத ஓய்வூதியம், அகவிலைப்படி வழங்கப்படும்.

டிராக் மேன், கீமேன், லோகோ பைலட் ஆகியோருக்கு குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ. 10 ஆயிரம் கிடைக்கும். இது ரயில்வே ஊழியர்களுக்கு மிகுந்த பலனை தரும் என்றார்.

அப்போது, கூடுதல் கோட்ட மேலாளர் சிவலிங்கம், கோட்ட முதுநிலை பணியாளர் நல அலுவலர் சௌந்தரபாண்டியன், கோட்ட நிதி மேலாளர் சித்ரா ஆகியோர் உடனிருந்தனர்.

காடையாம்பட்டி ஒன்றியத்தில் வளர்ச்சிப் பணிகள்: ஆட்சியர் ஆய்வு

சேலம், ஆக. 27: காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ரா. பிருந்தாதேவி செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக்கு பின்னர் ஆட்சியர் தெரிவித்ததாவது:

காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், ஊராட்சி பொது வளர்ச்சி நிதி, மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், தூய்மை பாரத இயக்கம், 15ஆவது ஒன்றிய நிதிக் குழு, பாரத பிரதமரின் வீடுகள் கட்டும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் ரூ. 113.34 கோடி மதிப்பீட்டிலான 3,275 திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 2,559 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 716 பணிகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட தாராபுரம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மைய கட்டடம், அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் இயக்கத்தின் மூலம் ரூ. 7.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளிட்டவை ஆய்வு செய்யப்பட்டன.

மேலும், மூக்கனூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 31.46 லட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டடப் பணியினையும், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள தார் சாலையின் தரம் குறித்தும் என காடையாம்பட்டி ஊராட்சிப்பகுதிகளில் ரூ. 1.63 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் 12 வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இப் பணிகள் அனைத்தையும் தரமாகவும், உரிய கால அளவிலும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்றார்.

எஸ்.எஸ்.ஐ. உள்பட இருவர் ஆயுதப்படைக்கு மாற்றம்

ஆட்டையாம்பட்டி, ஆக. 27: ஆட்டையாம்பட்டி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர் ஆகியோரை ஆயுதப்படைக்கு மாற்றம் செய்து மாநகரக் காவல் ஆணையர் உத்தரவிட்டார்.

ஆட்டையாம்பட்டி காவல் நிலைய எல்லைக்கு உள்பட்ட காகாபாளையம் பிரிவு சாலையில் போலீஸார் செவ்வாய்க்கிழமை வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த தனியார் தொலைக்காட்சி செய்தியாளர், வாகன ஓட்டுநர் ஒருவரிடம் போலீஸார் பணம் வாங்குவதை விடியோ எடுத்துள்ளார். இதனைப் பார்த்த சிறப்பு உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர் ஆகியோர் செய்தியாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

மேலும் அவரை போலீஸ் ஜீப்பில் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். இது குறித்து அவர் மாநகர காவல் ஆணையரிடம் புகார் அளித்தார். இந்தப் புகாரின்பேரில் காவல் ஆணையர் பிரவீண்குமார் அபினபு விசாரணை செய்தார். இதையடுத்து சிறப்பு உதவி ஆய்வாளர் ராமன், தலைமைக் காவலர் ராமச்சந்திரன் ஆகியோரை ஆயுதப்படைக்கு பணியிட மாற்றம் செய்து ஆணையர் உத்தரவிட்டார்.

அசல் சொத்துப்பத்திரம் காணவில்லை

சேலம் மாவட்டம், சேலம் வட்டம், பெரிய புதூர் கிராமம், சாரதா காலேஜ் பின்புறம், சோனா நகர், கதவு எண். 311/4 என்ற முகவரியில் வசித்துவரும் **திரு. ஆறுமுகம் அவர்களின்** குமாரர் திரு. ஆ.குமார் (கைப்பேசி எண். 9842743139) என்பவரின் தகவல்படிக்கு நான் கொடுக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால்,

எமது கட்சிக்காரர் கடந்த 23.08.2024 ஆம் தேதியில் தனக்கு பாத்தியப்பட்ட சேலம் மாவட்டம், குரமங்கலம் சப்பிடி, சேலம் வட்டம், அழகாபுரம் புதூர் கிராமம், சர்வே எண். 130/8, 130/9, 130/10 இவைகளுக்கு ரீ சர்வே எண். 130/6ல் தற்போதைய மறு நில அளவைபடி வார்டு இ, பிளாக் 38, TS No. 29/2க்கு சம்மந்தப்பட்ட மனை எண். 7ல் 1946 சதுரடிகள் கொண்ட நிலம் மற்றும் கட்டிட வகையறாக்கள் சம்மந்தமாக சொத்தின் பேரில் வீட்டுக்கடன் பெற சட்டக்கருத்துரை பெற தனது அசல் ஆவணங்களை தனது வீடான சோனா நகரில் இருந்து சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சான்றிட்ட நகல்கள் மற்றும் வில்லங்க சான்று பெற தனது இரண்டு சக்கரவாகனத்தில் வந்து, சாரதா கல்லூரி எதிரில் உள்ள ஜெராக்ஸ் கடையில் தனது அசல் ஆவணங்களை எடுத்து பார்த்தபோது வண்டியில் வைத்திருந்த, சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அசல் கிரயப்பத்திரம் ஆவணம் எண். 1364/1985 நாள் : 28.06.1985, அசல் கிரயப்பத்திரம் ஆவணம் எண். 372/1991 நாள் : 18.02.1991 மற்றும் அசல் பொது அதிகாரப்பத்திரம் ஆவணம் எண். 470/1996 நாள் : 01.07.1996 ஆகிய அசல் பத்திரங்கள் வழியில் கீழே விழுந்து தொலைந்துவிட்டதாகவும், பல இடங்களில் தேடியும், அக்கம் பக்கம் விசாரித்தும் பார்த்ததில் மேற்படி பத்திரம் கிடைக்கவில்லை. எனவே மேற்படி அசல் பத்திரம் பொது மக்கள் யாரேனும் கிடைக்கப்பெற்றால் எமது கட்சிக்காரரின் முகவரிக்கோ அல்லது கீழேகண்டுள்ள முகவரிக்கோ தெரிவிக்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

K.KANDASAMY, B.Com.,B.L.,
Advocate, MS No. 2969/2009,
Anna Nagar, karuppur Post,
Salem Dist - 12, **Cell : 9994772522**

உலக நடப்புகள்
உங்கள் விரல் நுனியில்...
www.dinamani.com

ADITYA BIRLA CAPITAL

பாதுகாத்தல், நிதி முதலீட்டுக்கான ஆலோசனை கூறல்

ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிட்டெட்

பதிவு அலுவலகம் : இந்தியன் ரேயான் காம்பவுண்டு, வெரவல், குஜராத் – 362 266
கிளை அலுவலகம் : 1/276/2, தரை தளம், கந்தஸ்வர்ண மெகா மால், ப்ளாக் B, சாரதா கல்லூரி சாலை, ஃபேர்லேண்ட்ஸ், சேலம் – 636 016

"பிற்சேர்க்கை – IV-A"
(பார்க்க விதி 8(6) க்கான விதி விலக்கு)
அசையா சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் " 2002 – உடன் படிக்க – பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள்' 2002 ன் விதி 9 (1) க்கான விதி விலக்கு – ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், அவரவர் கடனுக்கான நிலுவைகளுக்கான ஜாமீனாக, ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்த, ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிட்டெட் – ன் அதிகாரப்பூர்வ அலுவலரால், 08.08.2022 அன்று இயற்சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், கடன்தாரர்கள் / கூட்டு கடன்தாரர்களான M/s. சாய் தால் மில், திரு கணேஷ் மற்றும் திருமதி அருணா ஆகியோரிடமிருந்து ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு 16.08.2024 ம் தேதியின் படி வர வேண்டிய நிலுவைத்தொகை **ரூ. 1,32,88,212.42/–** (ரூபாய். ஒரு கோடியே முப்பத்து இரண்டு இலட்சத்து எண்பத்து எட்டாயிரத்து இருநூற்று பன்னிரண்டு மற்றும் பைசா நாற்பத்து இரண்டு மட்டும்) மற்றும் பணமாக்கப்படும் வரை வரும் பொருந்தத்தக்க வீதத்தில் அன்றாடம் சேர்ந்து வரும் வட்டி மற்றும் கட்டணங்கள் போன்றவற்றை வசூலிப்பதற்காக "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் 2024 அக்டோபர் 01 ம் தேதியன்று விற்பனை செய்யப்படும். அடிப்படை விலை, டேவணித்தொகை ஆகியன கீழ்க்கண்டவாறு –

அசையா சொத்துக்களின் விபரம் அடிப்படை விலை	டேவணித்தொகை (10%)	டேவணித்தொகை (10%)
இனம் எண். I – சேலம் மாவட்டம், சேலம் மேற்கு பதிவு மாவட்டம், சூரமங்கலம் சார்பதிவு மாவட்டம், சேலம் மேற்கு தாலுக்கா, அழகாபுரம் கிராமம், சர்வே எண். 17/2 ல் அமையப்பெற்ற புஞ்சை ஹெக்டேர் 1.78.5 க்கு தீர்வை ரூ. 4.40, உட்பிரிவு படி சர்வே எண். 17/2A1A4., இந்த சர்வே எண்ணில் உள்ள இடம் மற்றும் இதர சர்வே இடங்கள் ஆகியன சேர்ந்து வீட்டுமனைகளாக மாற்றப்பட்டதில் உள்ள 2317 சதுர அடி பரப்பளவு கொண்ட ப்ளாட் எண். 8 என்ற இந்த சொத்து விபரத்துடன் தொடர்புடைய சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதற்கான எல்லைகள் மற்றும் அளவீடுகளாவன – மேற்கு – 25 அடி அகல தென்வடல் சாலை, கிழக்கு – மாரியப்பன் மற்றும் பிறருக்கு சொந்தமான இடம் தெற்கு – ப்ளாட் எண். 15, வடக்கு – பாலகிருஷ்ணனுக்கு சொந்தமான ப்ளாட் எண். 7., இவைகளுக்கு மத்தியில் உள்ள கிழமேல் வடக்கு புறம் – 61 அடி., தெற்கு புறம் – 60 அடி., தென்வடல் கிழக்கு புறம் – 30 அடி., மேற்கு புறம் – 41.3 அடி., என மொத்தம் 2137 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய அனைத்து வழி வசதி மற்றும் மாமூல் பாதை உரிமைகள் முழுவதும்., இச்சொத்து டவுன் சர்வே வார்டு D, ப்ளாக் 4, ப.ந. எண். 7/10, சேலம் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. இச்சொத்து "ஜெய் நகர்" லே அவுட்டில் அமைந்துள்ளது.	ரூ. 73,89,150/–	ரூ. 7,38,915/–
இனம் II – ஷெட்யூல் A – சேலம் மாவட்டம், சேலம் மேற்கு பதிவு மாவட்டம், சூரமங்கலம் சார்பதிவு மாவட்டம், சேலம் தாலுக்கா, ரெட்டியூர் கிராமம், சர்வே எண். 35/2 ல் அமையப்பெற்ற புஞ்சை ஏக்கர் 5.67., க்கு தீர்வை ரூ. 8.55, உட்பிரிவு படி சர்வே எண். 35/2அ., ல் உள்ள புஞ்சை ஹெக்டேர் 1.34.0 க்கு தீர்வை ரூ. 5.16/– உட்பிரிவு படி சர்வே எண். 35/2A1 புஞ்சை ஹெக்டேர் 1.30.5 க்கு தீர்வை ரூ. 5.00., இதில் உள்ள புஞ்சை ஏக்கர் 0.72 சென்ட் அல்லது 31378 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம்., உட்பிரிவு படி வார்டு இ, ப்ளாக் 4, T.S. எண். 11/2, உட்பிரிவு படி T.S. எண். 11/14, 11/15, கோல்டன் வேலி ப்ளாக் A, ப்ளாக் B ல் உள்ள 31378 சதுர அடி பரப்பளவு கொண்ட இடத்தில் உள்ள 584–3/4 சதுர அடி பரப்புடன் இதன் மேற்கண்ட பட்டியல் அ சொத்தில் உள்ள பிரிபடாத பங்கு இடம் உள்ளிட்ட இந்த சொத்து விபரத்துடன் தொடர்புடைய சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதற்கான எல்லைகள் மற்றும் அளவீடுகளாவன – மேற்கு – 30 அடி அகல தென்வடல் சாலை, கிழக்கு – சர்வே எண். 35/1 ல் உள்ள கால்வாய், தெற்கு – K சின்னப்பனுக்கு சொந்தமான இடம், வடக்கு – சர்வே எண். 35/2B1 ல் உள்ள இடம், இவைகளுக்கு மத்தியில் உள்ள கிழமேல் வடக்கு புறம் – 242–1/4 அடி., தெற்கு புறம் – 217–3/4 அடி., தென்வடல் கிழக்கு புறம் – 135 அடி., மேற்கு புறம் – 136–1/2 அடி., என மொத்தம் 31378 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம்., இதில் உள்ள 492–1/4 சதுர அடி பரப்புடன் இதன் மேற்கண்ட பட்டியல் அ சொத்தில் உள்ள பிரிபடாத பாக இடம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். பட்டியல் B சொத்து – இதன் மேற்கண்ட பட்டியல் A சொத்தில் உள்ள 492–1/4 சதுர அடி பிரிபடாத பங்கு இடம் உள்ளிட்ட இந்த சொத்து விபரத்துடன் தொடர்புடைய சொத்து. பட்டியல் C சொத்து – இதன் மேற்கண்ட பட்டியல் A சொத்தில் உள்ள 31378 சதுர அடி பரப்பளவு கொண